*செய்தி வெளியீடு*

*செ.வெ.எண்.*12 *நாள்:06.11.2017*

<u>*செய்தி வெளியீடு*</u>

## நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று (*06.11.2017*) நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் 222 கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சியர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா,இ.ஆ.ப., அவர்கள் பெற்றுக்கொண்டு அதன்மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ள அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் இன்று (*06.11.2017)* மாவட்ட ஆட்சியர் திருமதி.ஜெ.இன்னசென்ட்திவ்யா,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் குடும்ப அட்டை, வீட்டுமனைப்பட்டா, தொழில் மற்றும் கல்விக் கடன் உதவி, முதியோர் உதவித்தொகை, சாலை, குடிநீர், கழிப்பிடம் மற்றும் மின்சார வசதிகள் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 222 மனுக்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டது.

பொதுமக்கள் மாவட்ட ஆட்சியர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா,இ.ஆ.ப., அவர்களிடம் அளித்த இம்மனுக்களின் மீது சம்மந்தப்பட்ட அலுவலர்கள் பரிசீலனை செய்து தகுதி இருப்பின் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர் அவர்கள் உத்தரவிட்டார். அதோடு மட்டுமல்லாமல் கடந்த குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் தீர்வு காணாமல் நிலுவையிலுள்ள மனுக்களின் மீது விரைவான நடவடிக்கை எடுக்குமாறு அந்தந்த துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் அறிவுறுத்தினார்.

முன்னதாக உதகை நகராட்சிக்குட்பட்ட காந்தலில் டெங்கு தடுப்பு மற்றும் சுகாதார பணிகள் குறித்து மாவட்ட ஆட்சியர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

இம்மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் உதவி ஆணையர் (கலால்) திரு.முருகன், தனித்துணை ஆட்சியர் மனுக்கள்(ச.பா.தி) திரு.கார்த்திகேயன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு.மகபூப்பாட்ஷா, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திரு.கலைமன்னன் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.